# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
# எக்கோஸ் இந்தியா

செப்டம்பர் 2009 | தனிப்பட்ட உபயோகத்திற்காக | மலர் - 2 இதழ் 5


சகோதரிகள் மற்றும் சகோதரர்களுக்கு,
வணக்கம்.

நமது அன்புக்குரிய மாஸ்டர் அவர்களின் 83-வது பிறந்த நாள் விழாவின்போது, அதிக அளவில் அப்யாசிகளை எக்கோஸ் இந்தியா அரங்கத்தில் சந்தித்தது ஒரு மகிழ்ச்சிகரமான தருணமாகும்.

350-க்கும் மேற்பட்ட அப்யாசிகள், பல்வேறு மொழிகளிலும், எக்கோஸ் இந்தியா செய்திமடல் சந்தாதாரர்கள் ஆனது குறித்து, நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

மேலும், நாங்கள் நடத்திய எக்கோஸ் இந்தியா தொகுப்பாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கான கூட்டமானது, ஒருங்கிணைத்தல் மற்றும் விநியோகித்தல் சம்பந்தப்பட்ட விஷயங்களை ஒருமுகப்படுத்த பெரிதும் உதவியது.

இந்த இதழானது, ஐக்கிய நாடுகளின் சர்வதேச இளைஞர்கள் நாளில் நடத்தப்பட்ட, அனைத்திந்திய கட்டுரை எழுதும் போட்டி தொடர்பான அறிக்கைகளை கொண்டுள்ளது.

மண்டலச் செய்திகளான, மத்தியப்பிரதேசம், இந்தூரில் நடைபெற்ற பிரசெப்டர்கள் கூட்டம், ஆந்திரப்பிரதேசம் சித்தனூரில் தொடங்கப்பட்ட மிஷன் பணிகள், ஜார்கண்ட் ராம்கடில் திறந்து வைக்கப்பட்ட ஆசிரமம், வெவ்வேறு மண்டலங்களில் நடைபெற்ற வரவேற்புக்கூட்டங்கள், மற்றும் அப்யாசிகள் பயிற்றுவிப்பு நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள், போன்றவை இந்த இதழில் இடம்பெற்றுள்ளன.

மாஸ்டர் எப்பொழுதும் கூறும், படித்து மகிழ் மற்றும் செயலாற்றி உணர் என்னும் கூற்றிற்கிணங்க, அனைவரும் படித்து அதன்படி நடப்பார்கள் என்று நம்புகிறோம்.

இங்ஙனம்,

பதிப்புக் குழு.

## சென்னை



மாஸ்டர் அவர்கள், அவர்தம் பிறந்தநாள் கொண்டாட்ட விழாவை திருப்பூரில் முடித்துவிட்டு, ஆகஸ்ட் 3 சென்னைக்குத் திரும்பி வந்தார். விமான நிலையத்தில் அவருக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தும் வகையில் அங்கே குழுமியிருந்த அப்யாசிகளால் வரவேற்பளிக்கப்பட்டது. அவர் சில காரணங்களால் நீண்ட தூரம் நடக்க வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்டார். ஆனால் மாஸ்டர் தனது கார்வரை நடந்து வந்ததுடன் மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். இது போல அவர் எப்படி எந்த விதமான சூழ்நிலையிலும் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு தன்னைச் சரிப்படுத்திக்கொள்கிறார் என்பது, ஒவ்வொரு அப்யாசியும் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பாடமாகும்.



டவுன் மெமரி லேன் என்ற புத்தகத்தில், மாஸ்டர் அவர்கள், ஜபல்பூரில், தமது சிறு வயது நாட்கள் மற்றும் இயேசு திருச்சபை பள்ளியில், தனது பள்ளிப்பருவம் பற்றி மிகவும் தெளிவாக எழுதியுள்ளார். அவர் அந்நாட்களைப் பற்றித் தனது தனிப்பட்ட உரையாடல்களில் அடிக்கடி நினைவு கூர்ந்துள்ளார். எனவே அந்தப் பள்ளியின் தற்போதைய முதல்வர், ஆகஸ்ட் 4 அன்று, மாஸ்டரைக் காண வந்திருந்தது, அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.



இயேசு திருச்சபை ஆண்கள் உயர் நடுநிலைப்பள்ளி முதல்வர் திரு. L. மேத்யுவுடன், மற்றொரு உயர் அமைப்பான, வட இந்திய திருச்சபை ஜபல்பூரின் தலைமை குரு, மற்றும் CNI பள்ளிகளின் தலைவரான டாக்டர் P.C. சிங்கும் வந்திருந்தார். மாஸ்டர் தமது பள்ளிப்பருவ நாட்களை நினைவு கூர்ந்து, அவர்களுடன் சிறிது நேரம் செலவிட்டார். ஆசிரமத்தைச் சுற்றிப் பார்த்த வருகையாளர்கள், அங்கு நிலவிய தெய்வீகச் சூழலைப் பற்றிக் குறிப்பிட்டதுடன், அவர்களுக்குள் நிலவிய மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினர்.



5 ஆகஸ்ட் அன்று, ரக்ஷா பந்தன் என்பதால், குழந்தைகள் உட்பட பல அப்யாசிகள், மாஸ்டரின் கைகளில் ராக்கி கட்டினர். மாஸ்டர் அவற்றை ஏற்றுக்கொண்டு அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்தார். அன்று மாலையும் கூட அதிகப்படியான அப்யாசிகள் கோல்ப் கார்டைச் சுற்றி வரிசையில் நின்று கொண்டு அவருக்கு இனிப்புகள் மற்றும் ராக்கிகளை வழங்கினர்.

நீண்ட வாரஇறுதி நாட்களான, ஆகஸ்ட் 13 முதல் 16 வரையில் அதிக அளவில் அப்யாசிகள் சென்னையில் குழுமியிருந்தனர். கிருஷ்ண ஜன்மாஷ்டமியான 13ந்தேதி அன்று, தியான மண்டபத்தில் மாஸ்டர் ஒரு சத்சங்கம் நடத்தினார். 15ம்தேதி அன்று, இந்திய சுதந்திர தினத்தையொட்டி, இந்தியாவில் விடுமுறை நாள் என்பதால், அன்றும் மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார்.

சத்சங்கத்திற்குப் பின்னர், மாஸ்டர் குடிலில் புல்லாங்குழல் மேதையான, சகோதரர் ஷஷாங்க், புல்லாங்குழல் வாசித்து வியக்கவைத்தார். மிகச்சிறப்பாக இருந்த அந்நிகழ்ச்சியை, மாஸ்டர் மகிழ்வுடன் ரசித்தார்.

ஆகஸ்ட் 16 அன்று, 7.10 மணியளவில், மாஸ்டர் தியான மண்டபத்தை அடைந்து பொறுமையாக அப்யாசிகள் வருகைக்காகக் காத்திருந்தார். சத்சங்கத்தை ஆரம்பிக்க, 7.25 வரை காத்திருந்தார். பின்வருவனவற்றை உணர்த்தும் வகையில் ஒரு அறிக்கை படிக்கப்பட்டது. "அப்யாசியாக இருப்பது ஒரு வரப்பிரசாதமாகும். சத்சங்கத்தில் கலந்து கொள்வது, அதைவிடப் பெரிய வரப்பிரசாதமாகும். மேலும், மாஸ்டருடன் சத்சங்கத்தில் இருப்பது அதைவிடப் பெரிய வரப்பிரசாதமாகும். எனவே மாஸ்டர் அல்லது பிரசெப்டர் வருவதற்கு 30 நிமிடம்





ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா

செப்டம்பர் 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 5

முன்பே, தியான மண்டபத்திற்கு வருவது ஒவ்வொரு அப்யாசியின் கடமையாகும். மாஸ்டர் அல்லது பிரசெப்டரைக் காக்கவைப்பது, ஒழுங்குமுறை கட்டுப்பாடு ஆகாது. நாம் முன்பே வந்து சத்சங்கத்தில் நம்மீது பொழியப்படும் தெய்வீகத்தைப் பெறும் வகையில் நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்." இந்த அறிக்கையின் விளைவை, அடுத்த வாரத்தில் நடந்த சத்சங்கத்தில், மாஸ்டர் வருவதற்கு முன்பே, தியான மண்டபம் முழுமையாக நிரம்பியிருந்ததன் மூலம், அறிய முடிந்தது.

பன்றிக்காய்ச்சல் பரவல் காரணமாக, மாஸ்டர் தனது பயணத்திட்டங்களை நிறுத்தி வைத்துள்ளார். இந்தியா முழுவதிலுமிருந்து அப்யாசிகள் வந்தவண்ணம் உள்ளதால், அவர் உண்மையிலேயே, ஓய்வின்றி, சுறுசுறுப்பாக செயல்பட்டபடி உள்ளார். அவருடைய அலுவலகப் பணிகள், பிரசெப்டர்களை உருவாக்குதல், அவரது குடிலுக்கு வரும் அப்யாசிகளை வரவேற்பது என பணிகளுக்கு முடிவே இல்லை. அவர் வேலைகள் தொடர்ந்து கொண்டே இருப்பதுடன், தனக்காக ஏற்படுத்திக் கொண்டுள்ள (மேலும் இவற்றில் ஈடுபடும் மற்றவருக்காகவும்) நிர்ணயங்கள், மிகவும் போற்றத்தக்கவை, மற்றும் பின்பற்றப்பட வேண்டியவையாகும். அவர்தம் வேலைகளில் இருக்கும் ஒழுங்கு, மற்றும் அவர் தாம் செய்யும் ஒவ்வொரு சிறிய விஷயங்களிலும் காட்டும் கவனம், இவற்றிலிருந்து நாம் அதிகமானவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

மாஸ்டர் அவர்களின், அப்யாசிகளுடனான தனிப்பட்ட உரையாடல்களில் இருந்து சில பகுதிகள்.

1) மாஸ்டர், டைம்ஸ் ஆப் இந்தியா நாளேடில், (சென்னைப்பதிப்பு , 23 ஆகஸ்ட், ஞாயிற்றுக்கிழமை) படித்த ஒரு கட்டுரையில், வாகனங்கள் ஓட்டுனர்/சவாரி செய்பவர் வண்டி ஓட்டும்போது/சவாரி செய்யும்போது மொபைல் போன் பயன்படுத்தினால் கார்/இரண்டு சக்கர வண்டிகள் மற்றும் மொபைல் போன்களைப் பறிமுதல் செய்வதுபற்றி, சென்னை உயர்நீதி மன்றம் அதிகாரபூர்வமாக அறிவித்ததை மேற்கோள் காட்டி, "நான் உங்கள் அனைவருக்கும், வாகனங்கள் ஓட்டும்போது, மொபைல் போன் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கிறேன். தேவைப்படுமாயின், வாகனத்தை சாலையோரமாக ஒதுக்கி நிறுத்தி பின்னர் பேசலாம்' என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

2) மன்னித்தல் மற்றும் மறத்தல்: அப்யாசியொருவர் மாஸ்டரிடம் "ஒரு நபர் தவறுகள் செய்யும்போது நீங்கள் அந்த நபரை மன்னித்து அவற்றை மறந்து விடுவீர்களா?" என்று கேட்டார். அதற்கு "நான் எப்பொழுதுமே உடனுக்குடன் மன்னித்துவிடுவேன். ஆனால் மறத்தல் என்பது முழுக்க முழுக்க அந்த நபரைச் சார்ந்தது. அவர் அவற்றை ஞாபகத்தில் வைத்திருக்கும்வரை மறத்தல் என்பது முடியாத காரியம்" என்று மாஸ்டர் பதிலளித்தார்.

3) ஒழுங்குமுறைக் கோட்பாடு: "அனைத்து ஒழுங்குமுறைகளும் சுய விருப்பத்தின் மூலம் வருகின்றன. அனைத்து ஒழுங்கீனங்களும் சுயம் சார்ந்த ஆசைகளால் வருகின்றன.

## அறிக்கைகள்



### உணவருந்தும்முன் பிரார்த்தனை செய்யும்படி, மாஸ்டரின் வேண்டுகோள்:

மொலெனா ஆசிரமம், ஆகஸ்ட் 2003

"நாங்கள் இன்னும், உணவு மற்றும் அவற்றின் தூய்மைபற்றி கவலைப்படுகிறோம். நான், நமக்கு நோய்களை உண்டாக்காத, உணவுகளின் புறத்தூய்மை பற்றி பேசவில்லை. ஆனால் ஆன்மீகம் சார்ந்த தூய்மைபற்றிக் குறிப்பிடுகிறோம்.

பாபூஜி அவர்கள், அனைத்தையும் நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கு தக்கவாறு மாற்றுதல்பற்றி, நமக்குக் கற்றுத்தந்துள்ளார். உணவு உட்கொள்ளும்முன், ஒரு விநாடி அவற்றை மாஸ்டருக்கு அர்ப்பணித்துத் தியானிக்க வேண்டும். நான் இதைச் செய்யும் எவரையும் - ஒருவரைக்கூட - பார்க்கவில்லை, எனவே, அதனை முயற்சித்துப் பாருங்கள். அது ஒரு சாண்ட்விச் ஆகவோ, அல்லது ஒரு குக்கி என்று அமெரிக்கர்கள் கூறும் பிஸ்கெட், எதுவாகினும் சரி. ஒரு விநாடி நேரம் கண்மூடி இதனை மகத்தான மாஸ்டர் உண்கிறார் என்று நினைக்கவும். பின்னர் அது அமிர்தமாக மாறிவிடுவதை நீங்கள் உணர்வீர்கள். அது இந்திய உணவாகவோ, அமெரிக்க உணவாகவோ ஏன் உணவாகக் கூட இருக்காது. அது ஒரு அமிர்தமாகும். அமர்தம் அனைவருக்குமானது. கிறித்தவ அமிர்தம், இந்து அமிர்தம், முஸ்லீம் அமிர்தம் மற்றும் புத்த அமிர்தம் என்று எதுவுமில்லை. அமிர்தம் கடவுளுடையது.

### ஸ்காலர்ஷிப் பயிற்சிநிகழ்ச்சி - இந்தியா

அப்யாசிகளுக்கான முதல் ஸ்காலர்ஷிப் பயிற்சிநிகழ்ச்சி, இந்தியாவில் கொல்கத்தா ஆசிரமத்தில் 26 செப்டம்பர் முதல் அக்டோபர் 2 vaவரை நடத்தப்படவிருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்கு, பங்கேற்பாளர்கள் முழுமையாகத் தங்கியிருத்தல் வேண்டும். மேலும், இது ஆங்கிலமொழி வாயிலாக நடத்தப்படும்.

இந்த பயிற்சியின் நோக்கம் யாதெனில், புதிய, மற்றும் வளர்ந்துவரும் மையங்களைச் சார்ந்த அப்யாசிகளுக்குப் பயிற்சி அளிப்பதுடன், அவர்களை மேலும் ஊக்குவித்து, மிஷன் சார்ந்த விஷயங்களில் ஆர்வமுடன் பங்கேற்கச் செய்தல் மற்றும் பயிற்சிகளை தொடர்ந்து செய்வதுடன் அனைத்து வகைகளிலும் மிஷன் சார்ந்த பணிகளில் திறமையுடன் செயலாற்றச் செய்வது ஆகும்.

இந்த நிகழ்ச்சிக்காக, உ.பி., கிழக்கு, மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா, வடகிழக்கு மாநிலங்கள், அஸ்ஸாம், பீகார் மற்றும் ஜார்கண்ட், உத்தராகண்ட் மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களின் மண்டலப்பொறுப்பாளர்கள், தமது மண்டலங்களிலிருந்து, பங்கேற்பாளர்களைத் தேர்வு செய்து, விண்ணப்பக்களை அனுப்பி வைப்பார்கள். அவற்றிலிருந்து 30-35 அப்யாசிகள், இந்த முதல் நிகழ்ச்சிக்காகத் தேர்வு செய்யப்பட இருக்கிறார்கள்.

### புத்துணர்வு மைய கால அட்டவணைகள்

அக்டோபர் 2009 முதல், SMSF புத்துணர்வு மையங்களை பயன்படுத்துவதில், மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன. சகோதரிகள் மற்றும் சகோதர அப்யாசிகளுக்கு, தனித்தனியாக அடுத்தடுத்த மாதங்களில் அனுமதி அளக்கப்படும். அடுத்து வரும் மாதங்களான அக்டோபர் 2009, டிசம்பர் 2009, மேலும் 2010 பிப்ரவரி, ஏப்ரல், ஜுன் மற்றும் அக்டோபர் மாதங்கள், சகோதரி அப்யாசிகளுக்கு மட்டுமே ஒதுக்கப்படும்.

2009 நவம்பர், 2010-ம் ஆண்டு ஜனவரி, மார்ச், மே, ஜுலை, செப்டம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் சகோதர அப்யாசிகளுக்கு மட்டுமே ஒதுக்கப்படும்.

முன்பே அனுமதி பெற்றுள்ள அப்யாசிகள் அனைவரும், தங்களது தேதிகளை, புதிய வழிமுறைகளுக்கு ஏற்றவாறு, மாற்றியமைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக மின் அஞ்சல் அனுப்பி வைக்கப்படும். இவை பற்றிய தங்கள் கேள்விகளை, retreat@sahajmarg.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். குழந்தைகள், புத்துணர்வு மையங்களில் அனுமதிக்கப்படுவதில்லை என்பதைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா
செப்டம்பர் 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 5

## CREST, பெங்களூரு - 3வது வருடாந்திர விழா



CREST, பெங்களூரு, தன் 3வது வருடாந்திர விழாவை, 9/8/09 அன்று கொண்டாடியது. அதில் தன்னார்வத்தொண்டர்கள், போதிக்கும் உறுப்பினர்கள், மற்றும் உதவியாளர்கள் கலந்து கொண்டனர். மாஸ்டர் 9/8/06 அன்று, முதல் இரு வார முகாமுடன் CRESTஐ திறந்து வைத்தார்.

காலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி ஆரம்பித்து, மதிய உணவுடன் நிறைவுற்றது. சுமார் 110 அப்யாசிகள் இதில் பங்கேற்றனர். CRESTன் இயக்குனர் சகோ.ஜகந்நாதன் CRESTன் பல்வேறு செயல்பாடுகளைப்பற்றி விரிவாக அறிக்கை சமர்ப்பித்தார். மிஷனில் பணி - பல கோணங்கள் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், சகோ.பாஸ்கர் ராவ், சகோ.K.T.மஞ்சுநாத், சகோ.B.G.சுப்ரமண்யா முதலியோர் பங்கேற்றனர். சகோ.B. ஸ்ரீநிவாசா நடுவராக பணி புரிந்தார். இத்தலைப்பில் பல குறிப்புகள் வெளிவரப்பெற்று, அவை மீது உறுப்பினர்களின் எண்ணப்பரிமாற்றம் ஏற்பட்டது. பார்வையாளர்களும் இதில் பங்கேற்று வினாக்களை எழுப்பி தங்கள் சந்தேகங்களை போக்கிக்கொண்டனர். இதன் பின், பக்திப்பாடல்கள், புல்லாங்குழல் இசை, "உண்மையான மதிப்பு" என்ற தலைப்பில் சிறு நாடகம் போன்றவை இடம் பெற்றன. உதவி இயக்குனர் சகோ.பிரமோத்ஜோரி நன்றி நவின்றார். ஒவ்வொருவரும் மாஸ்டரின் பால் அன்பு கொண்டு, மிஷனின் பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபட புத்துணர்ச்சி அடைந்தனர்.

## தியானக்கூடத்திறப்புவிழா, ராம்கர், ஜார்கண்ட்

8/8/09 சனிக்கிழமை, ராம்கர் மையத்தின் அப்யாசிகளுக்கு, ஒரு மகிழ்ச்சியான நாளாகும். அன்று, மாஸ்டரின் அருளினால், மண்டல பொறுப்பாளர் சகோ.G.M.பட்னாகர், மற்றும் பல மையங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகளின் முன்னிலையில், 1970 வருடம் முதற்கொண்டு சகஜமார்க்கப்பயிற்சி செய்துவரும் மூத்த அப்யாசி சகோ.ராஜ்நாத் திவாரி தியானக்கூடத்தைத் திறந்து வைத்தார். அதன் பின் சத்சங்கம் நடைபெற்றது.

காலை உணவிற்குப்பின் நடத்தப்பட்ட, அப்யாசிகளின் அடிப்படைபயிற்சித் திட்டத்தின் கீழ், முக்கியமானவையான தியானம், சுத்தகரிப்பு, பிரார்த்தனை மற்றும் நிலையான நினைவு முதலியன விவாதிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியை சகோ.பரமானந்த பாண்டே மற்றும் சகோதரி.அல்பனா திவாரி முன்னின்று நடத்தினர். இரண்டாவது நிகழ்ச்சியில், ராஞ்சி மையத்தின் சகோதரி அனிதா திவாரி வினா விடை நடத்தினார். அதன்பின் "மாஸ்டர் யார்" (WHAT IS MASTER) என்ற ஒளித்தகடு திரையிடப்பட்டது. அதே சமயத்தில், மற்றொரு கூடத்தில் மண்டல எண் 17 ஐச் சேர்ந்த பிரசெப்டர்களின் கூட்டம் நடைபெற்றது. திருப்பூரில் நடந்த பிரசெப்டர்களின் கூட்டத்தின் எண்ணங்களை கவனத்தில் கொண்டு, பிரசெப்டர்களின் நடத்தை முறை பற்றி விவாதிக்கப்பட்டது. மாதாந்திர மற்றும் மண்டல அறிக்கைகளின் அட்டவணை, மையங்களின் வளர்ச்சி, SMRTIயின் நிகழ்ச்சிநிரல், போதகர்களை உருவாக்குதல், VBSE, ECHO செய்தி மடல் போன்றவை அலசப்பட்டன. மாலை சத்சங்கத்திற்குப்பின் குழந்தைகள் பக்திப்பாடல்கள் பாடினர்.

அடுத்த நாள் நிகழ்ச்சிகள், காலை சத்சங்கத்திற்குப்பின் ஆரம்பமாயின. ஒரு திறந்த வெளி கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 30 நபர்கள் அதில் கலந்து கொண்டனர். 15 புது அப்யாசிகள் உருவாயினர். மற்றும் 5 பேர் கூடிய விரைவில் சேர்ந்து கொள்வர் என எதிர் பார்க்கப்படுகிறது. இவ்விரண்டு நாள் நிகழ்ச்சியில், சுமார் 200 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.

## கோதாவரிக்கனி (A.P) - பண்டாராவிலிருந்து படிப்பினை

கோதாவரிக்கனி மையத்தில், 09/08/09 அன்று, முழு நாள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தது. அதில் 125 அப்யாசிகள் கலந்து கொண்டனர். திருப்பூரில் நடந்த மாஸ்டரின் பிறந்த நாள் விழா அனுபவங்களையும், படிப்பினைகளையும் பகிர்ந்து கொள்வதே இதன் நோக்கம். கீழ்கண்ட அனுபவங்களும், படிப்பினைகளும் பொதுவானவையாக அமைந்தன.

❖ பண்டாராவில், மாஸ்டரை நேரில் பார்த்தாலும், பார்க்காவிட்டாலும், அவர் ஆழ்மனதில் ஒன்றியிருப்பதை அப்யாசிகளால் உணர முடிந்தது.

❖ பண்டாராவிலிருந்து திரும்பியபின், ஆழ்மனதின் பரிதவிப்பால், உலகையொட்டிய விஷயங்களில் ஈடுபாடு குறைந்தது.

❖ பண்டாராவில் தனிப்பட்ட தியானத்திலும், கூட்டுதியானத்திலும் ஆழ்ந்த அமைதியை உணர முடிந்தது.

❖ சிறப்பான கூட்டுச்செயலால், எவ்வாறு குறைந்த அப்யாசிகள் மூலம், அதிக வேலைப்பளுவை ஏற்க முடிந்தது என்பதைக் கண்டு அப்யாசிகள் மிகவும் பாராட்டினர்.

❖ திருப்பூரில் கண்டதைப்போலவே, உள்ளூர் அப்யாசி, வேற்றூர் அப்யாசி என்ற வேற்றுமை பார்க்காமல், யாவரையும் உண்மையான சகோதர பாவத்துடன் நோக்கும் பண்பை வளர்த்துக்கொள்ளும் தேவையை, யாவரும் உணர்ந்தனர்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா

செப்டம்பர் 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 5

# அனைத்திந்திய கட்டுரைப்போட்டி

இக்காலத்திய சிறுவர்களும் இளைஞர்களும், வருங்காலத்தை உருவாக்கும் சிற்பிகளாக இருப்பதால், மாஸ்டர் அவர்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார். இதையொட்டி கட்டுரைப்போட்டி கல்வி நிலையங்களிலும், SRCM மையங்களிலும் 12/08/09 அன்று UN பன்னாட்டு இளைஞர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்டது. UN செய்தி (இந்தியா, பூடான்) மையத்துடன் இணைந்து ஸ்ரீராம்சந்திரமிஷன் இப் போட்டியை நிர்வகித்தது. இந்நிகழ்ச்சி சிறுவர்கள் மற்றும் இளைஞர்களிடம் அன்பு, சகிப்புத்தன்மை முதலான நற்பண்புகளை மனதில் கொள்ளும் விதமாகவும், அவர்களை இதன்பால் ஊக்குவிக்கும் பொருட்டும் அமைந்தது. ஒரே குலம் என்ற லட்சியத்தை நோக்கியும், எல்லா மொழித்தடைகளையும் கடந்து செல்லவும், இக்கட்டுரைப்போட்டி 13 பிராந்திய மொழிகளில் நடத்தப்பட்டது. நாடு தழுவிய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இது மிகுந்த ஊக்கத்துடன் வரவேற்கப்பட்டது.

கேரளாவின் வெவ்வேறு மையங்களிலிருந்து, 140 தன்னார்வத்தொண்டர்கள், ஆலுவா, கேரள கேந்திரத்தின் ஆசிரமத்தில் பயிற்சி எடுத்தனர். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் 1000 பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இப்போட்டியில் பங்கேற்றன. இந்நிகழ்ச்சியின் சுவரொட்டிகள் பார்வையாளர்களை ஈர்க்கும் வண்ணம், பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. எளிதான, யோசிக்க வைக்கக்கூடிய தலைப்புக்கள், மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும் ஆசிரியர்களிடையே, மகிழ்ச்சியையும் ஆர்வத்தையும் தூண்டியது. இது மட்டுமின்றி பெரும்பாலானோர் மிஷனைப்பற்றியும் அறிய ஆவல் கொண்டனர். சில பள்ளிகள், மாணவர்களிடையே

நற்பண்புகள் உருவாக மறுபடியும் இம்மாதிரி நிகழ்ச்சி நடத்தக்கோரின. தன்னார்வத்தொண்டர்கள் இக்கட்டுரைகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பிராந்திய மட்டத்தில் இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் பணி செப்டம்பர் மாதம் ஆலுவா ஆசிரமத்தில் நடைபெறவுள்ளது. பின் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் நாட்டளவில் மதிப்பீடு செய்ய அனுப்பப்படும்.





அஹமதாபாத்தில் 230 கல்விச்சாலைகள் இதில் பங்கேற்றன. இவைகளிலிருந்து 9700 கட்டுரைகள், குஜராத்தி, ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் எதிர்பார்க்கப்படுகின்றன. இம்மையம் ஆறு பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. தன்னார்வத்தொண்டர் குழு, இப்பணியில் ஈடுபட்டுள்ளது. அஹமதாபாத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியில், பல முன்னணி கல்விச்சாலைகள் ஆர்வமுடன் பங்கேற்றது மிகவும் உற்சாகமளித்தது.

வதோதரா மையத்தில், சுமார் 56 கல்வி நிலையங்கள் பங்கேற்றன. இதில் 5700 மாணவர்கள் மிகுந்த ஆர்வமுடனும் ஊக்கத்துடனும் பங்கேற்றனர். 20 தன்னர்வத்தொண்டர்கள் அடங்கிய குழு, நன்றாக திட்டமிட்டு இப்பெரும் பணியை செய்து முடித்தது. கட்டுரைப்போட்டி ஆங்கிலம் ஹிந்தி மற்றும் குஜராத்தி மொழிகளில் நடத்தப்பட்டது. இக்கட்டுரைகளின் மதிப்பீடு முழுவீச்சில் நடந்து வருகிறது.

தென் கர்நாடகாவிலுள்ள பல்வேறு பள்ளிகள், கல்லூரிகளுக்கு, 50-60 தன்னார்வத்தொண்டர்கள் சென்று கட்டுரைப்போட்டியில் பங்கேற்க, மாணவர்களை ஊக்குவித்தனர். அநேக பள்ளிகள் இதில் மிகுந்த ஆர்வம் காட்டின. ஏற்கனவே இப்பள்ளிகள் மாணவர்களிடையே நற்பண்புகளை விதைக்கும் தேவையை உணர்ந்திருந்ததால், அவை இப்போட்டியில் இடம் பெற மிகவும் மகிழ்ச்சி அடைந்தன. தற்பொழுது தென் கர்நாடகாவிலுள்ள 600 பள்ளிகள், கல்லூரிகள் இதில் பங்கேற்கின்றன. கட்டுரைகளின் மதிப்பீடு விரைவில் தொடங்க உள்ளது. அவைகளிலிருந்து பள்ளிகள் / கல்லூரிகள் / மாநிலம் / நாடு தழுவிய சிறந்த கட்டுரைகள் தேர்வு செய்யப்படும்.

## மையத்தின் வளர்ச்சி, சித்தனூர்.-ஆ.பிரதேசம்

சித்தனூர், மெஹபூப் நகர் மாவட்டம், ஆந்திர மாநிலத்தின் ஒரு சிறிய கிராமமாகும். 1991ம் ஆண்டு, இரண்டு



அப்யாசிகளுடன் தொடங்கப்பட்ட இம்மையம், தற்பொழுது 36 அப்யாசிகளை கொண்டுள்ளது. அவர்களெல்லாம், தினசரி விவசாயத் தொழிலாளர்கள். தற்பொழுது ஒரு அப்யாசியின் இல்லத்தில் கூட்டம் நடைபெறுகிறது. வளர்ந்து வரும் அப்யாசித்தொகையால் இவ்விடம் போதுமானதாக இல்லை. இதை உணர்ந்த இரு அப்யாசிகள், ஒரு சிறு நிலத்தை ஆந்திர அரசாங்கத்திடமிருந்து வாங்கினர். அதில் மிஷனின் தேவைகளுக்காக ஒரு கூடம் (18'X30') அமைக்க, மாஸ்டரிடம் அனுமதி பெற்றனர். ஒரு வருடத்திற்குப்பின், கூடம் தயாராயிற்று. மாஸ்டரின் அனுமதியுடன், 16/08/09 ஞாயிறு அன்று, முதல் சத்சங்கம் அங்கு நடத்தப்பட்டது. மெஹபூப் நகர் மாவட்ட அப்யாசிகளுக்கு, இது ஒரு பொன்நாளாகும். ஏனெனில், இம்மாவட்டத்தில் மிஷனின் செயல்பாடுகளுக்கான முதல் கூடம் இதுவேயாகும். மாவட்டத்திலிருந்து 75க்கு மேற்பட்ட அப்யாசிகள் முழு நாள் விழாவில் பங்கேற்று, சகஜ மார்க்கத்தை பற்றிய ஆழ்ந்த உணர்வுத்திறனை மெருகேற்றினர். ஒரு அப்யாசி பேசும் பொழுது, அன்பும் நம்பிக்கையும், உண்மையான முனைப்பும் இருந்ததால், குறைந்தபொருட்செலவிலேயே இக்கூடம் கட்டப்பட்டதாகவும், இது ஒரு சிறந்த முன்னுதாரணம் என்றும் கருத்து தெரிவித்தார்.

பயிற்சி முகாம் - மங்களூர்



மங்களூர் மையத்தில், சகோ.மோகன்தாஸ் 9/8/09 அன்று, ஒரு பயிற்சி முகாம் நடத்தினார். அதில் சுமார் 35 அப்யாசிகள் கலந்து கொண்டனர். சத்சங்கத்திற்குப்பின், மாஸ்டரின் “கடமையும் பொறுப்புணர்வும்” என்ற ஒளித்தகடு திரையிடப்பட்டது. பின், பண்டாராக்களில் கலந்து கொள்வதின் அவசியத்தைப்பற்றியும், அதனால் ஏற்படும் தன்மை மாற்றங்களை எவ்வாறு தக்கவைத்துக்கொள்வது என்பதைப் பற்றியும் வலியுறுத்தப்பட்டது. அவர், நற்பண்புகளை வளர்த்துக்கொள்வதின் அவசியத்தைப்பற்றி பேசும்பொழுது, ஒன்பதாவது நியமமான “மற்றவருள் அன்பும் பக்தியும் பெருகுமாறு வாழ்க்கைமுறையை அமைத்துக்கொள்வது” பற்றி மேற்கோள் காட்டினார். நம் லட்சியத்தை அடையும் வண்ணம், நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள, மனவுறுதி பூண வேண்டுமென எடுத்துரைத்தார். “மனிதனின் பரிணாம வளர்ச்சியில் மாஸ்டரின் பங்கு” “பயிற்சியில் ஒழுங்குமுறை” என்ற தலைப்புகளில் கலந்துரையாடல் நடந்தது. இரவுப் பிரார்த்தனையை சரியான முறையில் எவ்வாறு செலுத்த வேண்டும் என்பதைப்பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது. தவிரவும், மைய அளவில் மிஷனை எவ்வாறு மேம்படுத்துவது என்பதைப்பற்றியும் விவாதிக்கப்பட்டது.

## போபால் M.P. பிரசெப்டர்களின் கூட்டம்

ஒன்பது வருடங்களுக்குப்பிறகு, 15/08/09 அன்று போபாலில் பிரசெப்டர்களின் கூட்டம் நடைபெற்றது. பிரசெப்டர்களின் பணிகளை பரிசீலனை செய்யும் விதமாகவும், வரும் மாதங்களில் அவற்றை எவ்வாறு அமைத்துக்கொள்வது என்பதைப்பற்றியும் விவாதிக்கப்பட்டது.

❖ பிரசெப்டர்களின் தனிப்பட்ட சாதனா மற்றும் அவர்களின் அனுபவங்கள் அலசப்பட்டன

❖ மிஷனுக்குள் மின்னஞ்சல் மூலம் இலகுவான கடிதப்பரிமாற்றம் செய்ய வலியுறுத்தப்பட்டது.

❖ கேந்திரத்தில் ஸ்ம்ருதி (SMRTI) யின் செயல்பாடுகளை நடத்த திட்டமிடுதல், மற்றும் மண்டலத்தின் செயல்பாடுகளை நெறிப்படுத்துதல்.

❖ தலைமைசெயலகம் மூலம் அறிவிக்கப்பட்ட, பாதுகாப்பு வழிகாட்டியின் விளக்கங்கள், PowerPoint மூலமாக பங்கேற்றவர்கட்கு எடுத்துரைக்கப்பட்டது.

❖ மண்டல பொறுப்பாளர் சகோ.விகல்ப், பல்வேறு செயல்பாடுகளில் அவரின் பங்கு, ஆசிரம கட்டிட வேலைகளின் இன்றைய நிலை, ஆயுள் சந்தா உறுப்பினர் நிலை, திறந்த வெளி கருத்தரங்கு, பயிற்சிதிட்டம், பல்வேறு மையங்களுக்கு பிரசெப்டர்களின் பயணம், பிரசெப்டர்களின் மாதாந்திரக் கூட்டம் போன்றவைகளை பரிசீலனை செய்தார்.

❖ “கேந்திரத்தின் தொலை நோக்கு” என்ற தலைப்பில் சகோ. சசின் சின்ஹா அளித்த பேச்சு, எதிர் காலத்தில் மையத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பதைபற்றிய ஒரு உருவகம் அமைக்க உதவியாக இருந்தது.

## இந்தூர்



"மனித மாற்றம்" என்பது பற்றி ஒரு சிறப்பு நிகழ்ச்சி, ஜூலை 5ந்தேதி, ஞாயிறு, இந்தூரில் நடைபெற்றது. இது சம்பந்தப்பட்ட பல்வேறு விஷயங்களைப் பற்றி, அநேகம் பேர் உரையாடினர். கீழ் நிலையிலிருந்து, உயர்ந்த நிலைக்கு எவ்வாறு மாறுவது என்பது பற்றி, "உள் நோக்கிய பயணம்" என்னும் தலைப்பில், சகோ. சின்கா பேசினார். மாஸ்டரின் கனவான, உலக மாற்றத்தில் நாமும் பங்கேற்க, அன்பு, சகோதரத்துவம் போன்ற உணர்வுகளை வளர்த்துக்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி, சகோ. ஸ்ரீவத்ஸவா பேசினார். விரைவான ஆன்மீக முன்னேற்றத்திற்கு, "மாஸ்டரின் மீதான அன்பு" என்பது பற்றி, சகோ. அவினாஷ் மற்றும் சகோ. ராஜேஷ் பேசினர். "அன்பு, முறையான, இயற்கையான இலக்கான கடவுளை நோக்கித் திசை திருப்பப்படவேண்டும்". மண்டலப்பொறுப்பாளர், சகோ.விகல்ப் நடத்திய, குறும் படங்கள், வினா-விடைப்பகுதிகள், மற்றும் PowerPoint விளக்கங்களுடன், நிகழ்ச்சி நிறைவுற்றது. ஆன்மீக முன்னேற்றம் பற்றிய கலந்துரையாடல் பங்கேற்றவர்களுக்கு உதவியாக இருந்தது. முழு நாள் நிகழ்ச்சிக்கு வருவதைவிட அதிகமாக, சுமார் 400 அப்யாசிகள், நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## அப்யாசி பயிற்சி திட்டம் நாக்பூர் - மஹாராஷ்டிரா

ஜூன் 28ம் தேதியன்று, நாக்பூர் மையம், விதர்பா வட்டாரத்தின் அப்யாசிகளுக்காக SMRTI அறிமுக பயிற்சி ஒருநாள் முகாம் நடத்தியது. நாஸிக் மையத்தின் சகோ. அனசுயா ராமசந்திரன், இத்திட்டத்தை நடத்தித்தர அழைக்கப்பட்டிருந்தார்.

இதில் நாக்பூர் மற்றும் சுற்றியுள்ள ஏழு மையங்களிலிருந்து சுமார் 30 அப்யாசிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சி, அப்யாசிகளின் ஆர்வத்தை நாள் முழுவதும் தூண்டும் விதமாக, ஒருவரோடு ஒருவர் கலந்துரையாடலுக்கு ஏற்ற விதத்தில் மிக சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது.

வினா விடை நிகழ்ச்சியில், சகோ.அனசுயா ராமச்சந்திரன் புது அப்யாசிகளின் சந்தேகங்களை தீர்த்துவைத்தார். பங்கேற்பு மிக நன்றாக அமைந்தது. அவர்களின் எண்ணங்களையும், அனுபவங்களையும், செயல்குறிப்பு படிவத்தில் (FEEDBACK FORM) குறிப்பிட்டனர். பயிற்சியின் உள்ளடக்கத்தை யாவரும் போற்றினர். இம்மாதிரி திட்டம் ஒழுங்கான காலவரையறையில் நடத்தப்பட தேவையிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். சிலர், ஒரு வருடத்திற்கும் மேலான அப்யாசிகளுக்கும் இம்மாதிரி பயிற்சி அளிக்கவேண்டுமென விருப்பம் தெரிவித்தனர்.



# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா

செப்டம்பர் 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 5


## வடகர்நாடகாவில் வரவேற்புக்கூட்டங்கள்

கடந்த இரண்டு மாதங்களில், வடக்கு கர்நாடக மாநிலத்தில், பல வரவேற்புக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பயதாகி, ஹவேரி, ராணிபென்னூர், கடக், மற்றும் குல்பர்க்கா ஆகிய இடங்களில் இக்கூட்டங்கள் நடைபெற்றன. மாஸ்டர்கள், மிஷன், மற்றும் செய்முறை ஆகிய சகஜமார்க்கத் தொடர்புள்ள பல விஷயங்கள் பற்றி, சகோ. கஷாம்பூர்கர், சகோ. கஜேந்திரா, மற்றும் சகோதரி சுஜாதா ஆகியோர் உரையாற்றினர். இக்கூட்டங்களுக்கு சிறந்த வரவேற்பு இருந்தது. மற்றும், அநேகம்பேர் மிஷனில் சேர தங்கள் ஆர்வத்தைத் தெரிவித்தனர்.



ஜூலை 5ம் தேதி, குல்பர்க்கா, மதர் தெரசா D.Ed கல்லூரியில், சகோ. கௌதம் அல்லிபூர் மற்றும் சகோ. மகேஷ் தேஷ்பாண்டே ஆகியோர் வரவேற்புக்கூட்டம் ஒன்றை நிகழ்த்தினர். சுமார் 100 மாணவர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியை மிகவும் கூர்ந்து கவனித்து, பலவினாக்களை எழுப்பினர். அவை அனைத்திற்கும், பேச்சாளர்கள் விளக்கமளித்தனர்.



ராணிபென்னூரிலிருந்து, சுமார் 20 கிமீ தொலைவில் உள்ள, ஹவேரி மாவட்டம், பயதாகி என்னும் இடத்தில் உள்ள, MDH பள்ளி வளாகத்தில், ஒரு வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 25 - 30 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். ஆழ்ந்த உள்நோக்குடன் பேசிய தலைமைஆசிரியை, சகஜ மார்க்கம் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றுவதன்மூலம், சமுதாயத்தில், நன்னெறிகளைத் திரும்பவும் கொண்டு வரமுடியும் என்று கூறினார். இந்த முன்னுரை



விளக்கத்திற்குப்பின், கலந்து கொண்ட அனைவரும், பயிற்சிமுறையைத் தொடங்கவேண்டிய கட்டாயத்தையும் வலியுறுத்தினார்.

ஹுப்ளியில் இருந்து 75 கி.மீ. தொலைவில் உள்ள ஹவேரியில், சமுதாயபவன் என்னும் இடத்தில், ஜுன்27ந்தேதி, சகோதரி சுஜாதா கேசவா, ஒரு வரவேற்புக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். சுமார் 25-30 பேர் பங்கேற்றனர். பெரும்பாலும் பெண்மணிகளும், சில ஆண்களும் பங்கேற்ற ஒரு எளிமையான கூட்டமாக இருந்தது. இந்நிகழ்ச்சியில், தம் நண்பர்களைப் பங்கேற்கவைப்பதில் தூண்டுகோலாக இருந்த, தாவண்கெரே மையத்தைச் சேர்ந்த இளம் அப்யாசி சகோ. விநாயக், சகஜ மார்க்கத்தில் தன் அனுபவங்கள் பற்றியும், 'மாற்றம்' பற்றிய மாஸ்டரின் நோக்கங்கள் குறித்தும், மிக சரளமாக உரையாடினார். ஹவேரியில் செய்தி அதிகாரியாக உள்ள சகோ. மாயாசார், நிகழ்ச்சியினைச் சிறந்த முறையில் தொகுத்து அளித்தார்.




ஹவேரியில் இருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ள ராணிபென்னூர், அம் மாவட்டத்தின் மிகப்பெரிய இடமாகும். பெரும்பாலும் இளைஞர்கள், இளைய தொழிலதிபர்களைக் கொண்ட JCI (Junior Chamber International) சங்கத்தின் உள்ளூர் கிளையுடன் இணைந்து, ஒரு வரவேற்புக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 35 JCI அங்கத்தினர்கள் பங்கேற்றனர். எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயம், சகஜமார்க்க வழிமுறைத் தியானம் என்பதாகும். இறுதியில் உரையாற்றிய, மருத்துவராகவும் உள்ள JCI சங்கத்தலைவர், தியானத்தின் மையக்கருத்தையும், இன்றைய மனித மாற்றத்தின் அவசியத்தையும் ஆமோதித்தார்.

குல்பர்க்காவில், ஜூலை 6ந்தேதி, சகோதரி ஹரிகுமாரி சௌடாவின் இல்லத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. பெரும்பாலும் பெண்களைக் கொண்ட, குஜராத்தி சமூகத்தைச் சேர்ந்த சுமார் 19 பேர் பங்கேற்றனர். சகோதரி ஹரிகுமாரி, சகஜ மார்க்கத்தைப் பற்றிய முன்னுரையை வழங்கினார். ஆன்மீகம் எதற்காக? சகஜமார்க்கம் எதற்காக? நம்மிடையே வாழும் குருவின் முக்கியத்துவம், போன்றவை பற்றி சகோ.லட்சுமி சௌஹான் பேசினார். அனைத்தும், ஒரு குடும்பச் சூழ்நிலையிலான அடிப்படையில் இருந்தன. பங்கேற்றவர்களில் பெரும்பான்மையோர், குஜராத்தி மொழியினைப் புரிந்து கொள்பவர்களாக இருந்ததால், உரைகள் அனைத்தும், குஜராத்தி மொழியில் இருந்தன.

"நீங்கள் ஏதாவது கஷ்டத்திலோ, சங்கடத்தில் சிக்கிக்கொண்டாலோ, அல்லது தாங்கமுடியாத அளவில் உணர்ச்சி வசப்பட்டாலோ, அதனை, எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், பிரார்த்தனையின் மூலம் அவரிடம் ஒப்படைத்து விடுங்கள். அது உடனே அகன்று விடும்."

"பாபுஜி கூறுகிறார்" - பக்கம் 32



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா

செப்டம்பர் 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 5

## வி பி எஸ் இ துவக்கம் - சோலாப்பூர், மஹாராஷ்டிரா



சோலாப்பூர் மையத்தில், 1 முதல்7 ஆம் வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்கு, ஸ்ம்ருதி பாடத்திட்டத்தின்படி, நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி துவக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகள், ஒவ்வொரு மாதமும், ஒரு ஞாயிற்றுக்கிழமையாக, ஒரு வருடத்திற்கு நடத்தப்படும்.

2009, ஜூலை 12ந்தேதி, சிந்துவிஹார் பகுதியில் உள்ள குழந்தைகள், தியானக்கூடத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர். வீடியோ மூலம் கதைகள், கடின உழைப்பின் முக்கியத்துவம், ஒருமைப்பாடு, சகோதரத்துவம், நட்பு, பகிர்ந்து கொள்ளுதல், ஆகியவை பற்றி, ஆசிரியைகளான சகோதரி சுபாதா மற்றும் சகோதரி சாயா இருவரும், 59 குழந்தைகளுக்குக் கற்றுத் தந்தனர். சகோதரி சினேகல், நிகழ்ச்சியில் உதவி புரிந்தார். நிகழ்ச்சியில் காண்பிக்கப்பட்ட நீதிக்கதைகளை விளக்குமாறு குழந்தைகளைக் கேட்டபோது, அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பினை நன்கு பயன்படுத்தி, அனைவரும் வியக்கும் வண்ணம், பெரியவர்களைவிடச் சிறப்பாக, கதைகளில் பொதிந்துள்ள அர்த்தங்களை எடுத்துக் கூறினர்.

தினசரி உடற்பயிற்சியின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியபோது, மாணவர்கள் அதை ஏற்றுக் கொண்டனர். இளைஞர் குழுவின் தொண்டர்கள், அடுத்த மாதத்தில் இருந்து நடத்த இருக்கும் உடற்பயிற்சி நிகழ்ச்சியில், பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் குழந்தைகள் காட்டிய ஆர்வமானது, எதிர்கால சந்ததியினர் நல்லமுறையில் வளர, மேலும் இது போன்று பல நிகழ்ச்சிகளைத் திட்டமிட, தொண்டர்களை ஊக்குவித்தது. குழந்தைகள், அப்யாசிகள் அல்லாதவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த போதிலும், மிஷன் பிரார்த்தனையை ஆங்கிலத்தில் கற்று அறிந்தது, மன மகிழ்ச்சியை அளித்தது.

## பயிற்சி முகாம் - மண்டல ஆசிரமம், தும்குன்டா, ஹைதராபாத்

5 வருடம் தியானப்பயிற்சியை முடித்த அப்யாசிகளுக்காக, 2009 ஆகஸ்ட்7 வெள்ளி முதல், ஆகஸ்ட்9 ஞாயிறு வரை, ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.

தீவிரமான போட்டிகள் நிறைந்த இன்றைய நவீன காலத்தில், தன்னைப்பற்றிய சுயசோதனை செய்வதும், சகஜமார்க்க வழிமுறையிலான வாழ்க்கை பற்றி பரிசீலனை செய்வதுமே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாக இருந்தது. முறையாக, ஒழுங்காகப் பயிற்சி செய்வதின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. சிறு குழுக்களாகப் பிரிந்து, பயிற்சியை ஆர்வத்துடனும், பொறுப்புணர்ச்சியுடனும், செய்வதற்கான செயல்முறைகளைப் பற்றிக் கலந்துரையாடினர்.

அவசரமான வாழ்க்கைமுறை, இரவுநேரப்பணி, தவறான மனப்பாங்கு, மனோபலம் இல்லாமை, ஊக்கமின்மை, ஆகிய பல்வேறு காரணங்களால், தங்கள் தியானப்பயிற்சியை ஒழுங்காகச் செய்ய முடியாத, 18 இளம் அப்யாசிகள், நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

அனைவரும், இயற்கையானசூழலில், தங்கள் உள் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு, சகஜமார்க்க வாழ்க்கை முறையில் ஒன்றாக இணைந்து இருந்தனர். வெளிப்படையான மனப்பான்மை, பிரச்சனைகளுக்குத் தங்களுக்குள்ளேயே விடை காண உதவியது. அமைதியான சூழ்நிலையில் தனி சிட்டிங்குகள் நடைபெற்றன. தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் சிட்டிங் கிடைத்ததால், பயிற்சி சம்பந்தமான கேள்விகளைப் பற்றிக் கலந்துரையாட, வாய்ப்பும், நேரமும் கிடைத்தது.

தனி சிட்டிங்குகள், சகோதர சகோதரிகளுடன் கலந்துரையாடல் ஆகியவற்றால், மிகுந்த நன்மை அடைந்ததாக பங்கேற்றவர்கள் தெரிவித்தனர். தங்கள் தியானப்பயிற்சியில் முன்னேற ஒவ்வொருவரும் உறுதி பூண்டனர். சாதனை செய்வதில், மனித எல்லைக்குள் ஏற்படும் இயலாமைகளைப் பற்றிய சிந்தனைகளால் ஏற்பட்ட இறுக்கமான சூழ்நிலையைத் தவிர்க்க, பங்கேற்றவர்கள் ஒரு பொருள் பொதிந்த நாடகத்தை நடத்தினர். நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களும், பங்கேற்றவர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்ததுடன், ஞாயிறு மாலை 6 மணிக்கு, முகாம் நிறைவடைந்தது.

## உஸ்மானியா மருத்துவக்கல்லூரியில் கலந்துரையாடல் முகாம்

2009, ஆகஸ்ட்4ந்தேதி, உஸ்மானியா மருத்துவக்கல்லூரி வளாகத்தில், ஹைதராபாத் வி பி எஸ் இ உறுப்பினர்கள், ஒரு மூன்று மணி நேர கலந்துரையாடல் முகாம் நடத்தினர். மருத்துவக் கல்லூரியின் 200 புதிய மாணவர்கள் பங்கேற்றனர். முதல் பேச்சாளர், சிறிய தினசரி உதாரணங்கள் மூலம், 'வாழ்க்கையின் சரியான முறை' பற்றிக் கூறினார். அடுத்துப் பேசியவர், தனிப்பட்ட குறிக்கோள்களைக் கொள்ளவேண்டிய அவசியம், மற்றும் அதற்கான வழிமுறைகளைக் கையாளுதல், ஆகியவை பற்றி எடுத்துரைத்தார். மேலும், எண்ணம், தைரியம், சீரான மன நிலை இவைகளின் முக்கியத்துவத்தைப் பற்றியும் கூறினார். ஒரு சிறிய ஒளி-ஒலி காட்சியுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

மருத்துவக் கல்லூரியில் தங்களது இரண்டாவது தினமே ஆனதால், கலந்துரையாடலில் முதலில் தயக்கத்துடன் இருந்த மாணவர்கள், போகப் போக மிகுந்த ஆர்வம் காட்டினர். இத்தகைய ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்க முடிந்ததால், தங்கள் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்தனர். மேலும் பலர்,

"இந்த நிகழ்ச்சி என் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது"

"மிகவும் தேவைப்படும் காலத்தில் கிடைத்துள்ளது"

"நான்யார்? சமுதாயத்தில் என் பங்கு என்ன? என்பதைஉணரவைத்தது"

"என் வாழ்க்கையில் அமைதியைக் கொண்டு வந்துள்ளது"

"என் ஆன்மாவின் முக்கியத்துவத்தை உணர்ந்தேன்"

என்று கூறினர்.

இத்தகைய நிகழ்ச்சிகள், அவ்வப்போது நடத்தப்பெறவேண்டும் என்று, அனேகம் பேர் கேட்டுக் கொண்டனர். வேறு பல பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், முக்கியமாக கிராமங்கள், சிறியநகரங்கள் ஆகிய இடங்களில் இந்நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும் என்று, அனைவரும் விண்ணப்பித்து, மற்றவர்களுக்காகவும் உணர்ந்து கூறியது, மனதை மிகவும் நெகிழ்ச்செய்தது.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா
ஒளிமையங்கள்
செப்டம்பர் 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 5










## ஆர்.கே. புரத்தில் உள்ள தில்லி ஆசிரமம்

1958ஆம் ஆன்டு தில்லி மையம் நிறுவப்பட்டது. அதன்பிறகு வெகு காலத்திற்கு, எஸ் ஆர் சி எம் செயல்பாடுகளுக்குத் தலைநகரில் ஒரு குறிப்பிட்ட இடம் இல்லாமல் இருந்தது. 1986, நவம்பர் 6 அன்று, தில்லி நிர்வாகத்திடம் இருந்து, தெற்கு தில்லி, ஆர்.கே. புரம் செக்டர் 4ல், 900 சதுர கஜம் நிலம் சொந்தமாகப் பெறப்பட்டது. யோகப்பயிற்சி அளிக்கும் ஒரு கல்வி ஸ்தாபனமாக எஸ் ஆர் சி எம்மை அங்கீகரித்த, கல்வி, மற்றும் கலை இலாகாவின் சிபாரிசில், இது கிடைக்கப்பெற்றது. 1986, நவம்பர் 19ந் தேதி, மாஸ்டர் தன் மனைவி சகோ. சுலோசனா (மாமி)வுடன் இடத்தைப்பார்வையிட்டு, அந்த ஸ்தலத்தில் சிறிய செடி ஒன்றை நட்டார்.

1987, பிப்ரவரி 3, வசந்தபஞ்சமி அன்று, மாஸ்டரால் ஆசிரமத்திற்கு, அடிக்கல் நாட்டப்பட்டது. அச்சமயம் சொற்பொழிவாற்றிய மாஸ்டர், "அன்பு என்பது வெளி உருவத்தில் இல்லை. உள்ளேதான் இருக்கிறது. எவ்வாறு என்றால், நாம் ஒரு கடையில் இருந்து ஒரு பொருள் வாங்கும் போது, அது எவ்வளவுதான் அழகாகக் கட்டப்பட்டிருந்தாலும், உள் இருக்கும் பொருள்தான் முக்கியம். அழகான வெளிப்பக்கம் இல்லை. அது கிழிக்கப்பட்டு, குப்பைத்தொட்டியில் எறியப்படுகிறது. உள்ளிருப்பதையே நாம் மனதில் கொண்டு மகிழ்கிறோம். அதேபோல் நம் உள்ளத்தைத்தான் மாஸ்டரும் விரும்புகிறார்" என்றார்.

ஜெர்மனியைச் சேர்ந்த கட்டிடநிபுணர் சகோ. ஒட்டோ ஸ்டீடில் என்பவரால் ஆசிரமம் திட்டமிட்டப்பட்டது. 1987லேயே திட்டங்கள் தயாராக இருந்தபோதிலும், அனுமதி கிடைக்க வெகுகாலம் ஆனதால், 1989 அக்டோபர், கட்டிடவேலை துவங்கும்வரை, சத்சங்கங்கள், ஸ்தலத்தில் போடப்பட்டிருந்த பந்தலிலேயே நடைபெற்றன.

வழக்கமாக, சகோ. M.M. கபூருடன், சப்தர்ஜங் என்க்ளேவில் தங்கும் மாஸ்டர், மான்பூங்காவைக் கடந்து, ஆசிரம வளாகத்திற்கு நடந்து செல்வார். சுதந்திரமாகச் சுற்றிவரும் மயில்களை அயல்நாட்டு அப்யாசிகளுக்குக் காட்டுவார். அம்மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு அழகான மயில், தன் தோகையை முழுவதும் விரித்து எதிர்ப்புறம் நோக்கி நின்று கொண்டிருந்தது. அதன் வண்ணமயமான முன்புறத்தை, அப்யாசிகளுக்குக்காட்டவிரும்பி, மாஸ்டர், மிக மென்மையாக 'திரும்பு' என்றவுடன், உடனே அந்த மயில் கீழ்ப்படிந்தது.



ஆசிரமத்திற்கான நிலம் சிறியதாக இருப்பதால், 4 மாடிகள், மற்றும் வெளிஇடங்களிலிருந்து வரும் அப்யாசிகள் தங்க ஒரு அடித்தளம், ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

1991, அக்டோபர் 13ந் தேதி, மாஸ்டரால் அடித்தளத்தில் முதல் சத்சங்கம் நடத்தப்பட்டது. தியானம் மற்றும் கூட்டங்கள் நடக்கும்போது, கீழ்த்தளம் மற்றும் உப்பரிகையில் அனைவரும் அமர உதவியாக உள்ளது. இரண்டாம் தளத்தில், இரண்டு அறைகளைக் கொண்ட மாஸ்டருக்கான தங்கும் இடம் உள்ளது. 1992 டிசெம்பர் 2ந் தேதி, முதல் முறையாக மாஸ்டர், அங்கு தங்கினார்.

முதல்தளத்தில் கான்கிரீட் போட கம்பிகள் வைக்கப்பட்டபோது, மாஸ்டர் மேலே சென்று அதைப்பார்வையிட்டார். வெளியே நீட்டிக்கொண்டிருந்த மெல்லியகம்பி ஒன்று வெட்டியதால், மாஸ்டரின் விரலில் காயம் எற்பட்டு, சிறிது ரத்தம் வந்தது. அதை மிக இலேசாக எடுத்துகொண்ட மாஸ்டர், 'எனக்கு இச்சிறய காயம் எற்பட்டது நல்லதே. இல்லாவிட்டால் இங்கு வேலை பார்க்கும் யாருக்காவது, மிகப்பெரிய காயம் எற்பட்டிருக்கும்' என்று கூறினார்.

1992ல், ஆசிரமம் கட்டிமுடிந்தபோது, அப்யாசிகளின் எண்ணிக்கை 40 லிருந்து 300 ஆக உயர்ந்தது. உள்ளூர் அப்யாசிகள், தாராளமாக பொருளுதவி செய்தும், கட்டிடவேலைகளில் ஆலோசனை கூறியும் உதவினார்கள். மாஸ்டர் வட இந்திய, மற்றும் வெளிநாட்டில் பயணம் மேற்கொள்ளும்போது, தங்கி இளைப்பாற வசதியாக, இந்த ஆசிரமம் உள்ளது. 1998ம் ஆண்டு, இந்திரப்பிரஸ்தா அரங்கில், மாஸ்டரின் பிறந்தநாள் விழாக்கொண்டாட்டத்தின்போது, பல்வேறு செயல்பாடுகளுக்கும் இந்த ஆசிரமம் மையமாக இருந்தது. இப்போது, பக்கத்து மாநிலமான ஹரியானாவிலுள்ள குட்காவ், பாலம் பண்ணையில் 2001 ஜூன் 21 பதிவுசெய்யப்பட்ட மற்றுமொரு மண்டல ஆசிரமமும் உள்ளது.





புது தில்லி ரயில் நிலையம், பாலம் விமான நிலையம் இரண்டு இடங்களில் இருந்தும், சுமார் 15 கி.மீ. தூரத்தில் ஆர்.கே.புரம் ஆசிரமம் அமைந்துள்ளது. மிகவும் நல்ல இடத்தில் அமைந்துள்ளதால், சத்கோல் வந்து போகும் அப்யாசிகள் தங்கிச்செல்ல வசதியாக உள்ளது.

**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india**
**For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2009 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved.
"Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.